Academic Research News

Academic Research News

Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

Principles of Living and the Nobility of Sacrifice in *Kambaramayanam*

Dr. A. Ranjani, Assistant Professor, Department of Tamil, Seethalakshmi Ramaswami College, Tiruchirappalli, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/000-0007-4650-3710

Abstract

Literature is not a mere tool for entertainment. It is a sublime art form that guides social cohesion and the cultural elevation of people. In this regard, Kambaramayanam stands as a timeless epic of life and teach humanity the path of righteousness across eras. This paper analyses the sublime values of life and the magnificent spirit of sacrifice exhibited by the characters in Kambaramayanam. It juxtaposing them with the poetic and philosophical theories of Western scholars. The study explores the pure love of Rama and Sita, who embraced even those who wronged them with forgiveness, and Rama's noble act of seeking boons from Dasaratha to clear the names of Kakeyi and Bharata, thereby erasing all blame. Moreover, it highlights Kausalya's emotional melting point upon witnessing Bharata's moral righteousness and she proclaims, "Even if there were countless millions of Ramas, could they ever come close to your grace, my lord?". Thus, the paper illustrates the grandeur of Satrughna, who selflessly rejects the royal throne offered to him. Ultimately, this research reveals that humanity-currently divided by enmity, hatred, and vindictiveness due to various reasons-must unite by embracing the core values of sacrifice and brotherhood illuminated by Kamban.

Keywords: *Kambaramayanam*, Values, Life, Philosopher, Sacrifice, Brotherhood.

References

[1] Kamban, Kambaramayanam (Yuddha Kanda), (Various Editions).
[2] Ilampirai Manimaran, Kamban Kavithiran / Kaappiya Aaivuraigal (Kamban's Poetic Skill / Epic Research Essays).
[3] Coleridge, Samuel Taylor, Biographia Literaria, 1817. *(Ref: "No man was ever yet a great poet without being at the same time a profound philosopher")*
[4] Emerson, Ralph Waldo, Preface to Parnassus, 1874. *(Ref: "The great poets are judged by the frame of mind they induce")*
[5] Kamban, *Kambaramayanam (Complete Six Kandams) - Text and Commentary*, Commentary by Vai. Mu. Gopalakrishnamachariyar, Uma Pathippagam, Chennai.
[6] *Kambaramayanam - Yutha Kandam (Mahavidwan Commentary)*, Vardhamanan Pathippagam, Chennai.
[7] Thiruvalluvar, *Thirukkural - Text and Parimelazhagar Commentary*, Kazhaga Veliyeedu, Chennai.
[8] Jagannathan, Ki. Va., *Kamban Kalai (The Art of Kamban)*, Amuthanilayam, Chennai.
[9] Radhakrishnan, Sa., *Kambanil Paathira Padaippukkal (Characterization in Kamban)*, Pari Nilayam, Chennai.
[10] Pater, Walter, Appreciations: With an Essay on Style, 1889. *(Ref: "Given the conditions I have tried to explain as constituting good art, then if it be devoted further to the increase of mens happiness, to the redemption of the oppressed, or to the enlargement of our sympathies with each other...")*

Volume 4, Issue 1 June 2026 **E-ISSN: 2584-167X**

[11] Richards, I. A. (Ivor Armstrong), Principles of Literary Criticism, 1924. *(Ref: Critical theory regarding the function of poetry and the mere combination of sounds)*

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

Academic Research News

Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 **E-ISSN: 2584-167X**

கம்பராமாயணத்தில் வாழ்வியல் நெறிகளும் தியாக மாண்பும்

முனைவர் அ. ரஞ்சனி, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, சீதாலட்சுமி ராமஸ்வாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி, தமிழ் நாடு, இந்தியா.

ORCiD: https://orcid.org/000-0007-4650-3710

ஆய்வுச் சுருக்கம்

இலக்கியம் என்பது சமுதாயத்தின் கட்டுக்கோப்பிற்கும், மக்களின் பண்பாட்டு உயர்விற்கும் வழிகாட்டும் உன்னதக் கலை வடிவமாகும். இவ்வகையில், காலத்தைக் கடந்து எக்காலத்து மனிதர்களுக்கும் அறவழியைப் போதிக்கும் வாழ்வியல் காப்பியமாகக் கம்பராமாயணம் திகழ்கிறது. இக்கட்டுரை, கம்பராமாயணத்தில் வெளிப்படும் உன்னத வாழ்வியல் நெறிகளையும், கதாபாத்திரங்களின் தியாக மாண்பினையும் மேலைநாட்டு அறிஞர்களின் கவிதை குறித்த தத்துவக் கோட்பாடுகளோடு ஒப்பிட்டு ஆராய்கிறது. பகைமை பாராட்டாது தீயோரை மன்னிக்கும் இராமன்-சீதையின் தூய அன்பு, கைகேயி மற்றும் பரதனுக்காக இராமன் தசரதனிடம் வரம் வேண்டிப் பழிநீக்கிய உன்னதப் பண்பு, பரதனின் தார்மீக நெறியைக் கண்டு "எண்ணில் கோடி இராமர்கள் என்னினும் அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ?" என்று கோசலை போற்றும் நெகிழ்ச்சி, மற்றும் கிடைத்த அரியணைப் பதவியைத் தியாக உள்ளத்தோடு மறுக்கும் சத்ருக்கனனின் மாண்பு ஆகியன இக்கட்டுரையில் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. பல்வேறு காரணங்களுக்காகத் தம்முள் ஒற்றுமையின்றிப் பகை, வெறுப்பு, பழிதீர்க்கும் உணர்வோடு பிரிந்து நிற்கும் மனிதகுலம், கம்பன் காட்டும் இத்தியாகப் பண்புகளின் மூலம் ஒன்றுபட வேண்டும் என்ற உன்னத நோக்கினை இவ்வாய்வு வெளிப்படுத்துகிறது.

குறிப்புச்சொற்கள்: *கம்பராமாயணம்*, வாழ்வியல், நெறிகள், தத்துவஞானி, தியாக மாண்பு, சகோதரத்துவம்.

முன்னுரை

இலக்கியம் என்பது வெறும் பொழுதுபோக்குக் கருவி அன்று; அது சமுதாயத்தின் கட்டுக்கோப்பிற்கும், மக்களின் பண்பாட்டு உயர்விற்கும் வழிகாட்டும் உன்னதக் கலை வடிவம் ஆகும். "சிறந்த கவிஞன் என்பவன் பிறர் மனத்தில் தோற்றுவிக்கின்ற பண்பாட்டைக் கொண்டே முடிவு செய்யப்படுகிறான்" என்று எமர்சனும், "நல்ல கவிஞன் ஒரு தத்துவ ஞானி" என்று கோல்ரிட்ஜும் கவிதையின் உன்னதப் பயனைக் குறிப்பிடுகின்றனர். இவ்வகையில், உலகியலோடு ஒட்டி உறவாடி, தத்துவ ஞானியாக நின்று கம்பன் படைத்த 'கம்பராமாயணம்' காலத்தைக் கடந்து எக்காலத்து மனிதர்களுக்கும் அறவழியைப் போதிக்கும் வாழ்வியல் காப்பியமாகத் திகழ்கிறது. வாழ்வு தான் இலக்கியம்; இலக்கியம் தான் வாழ்க்கை. அந்த வாழ்க்கை நெறி சார்ந்ததாக இருக்க வேண்டும் என்ற உன்னத நோக்கில் உருவானதே உலகப் பெருங்காவியங்கள் ஆகும். ஒரு சமுதாயத்தில் மக்கள் ஒரு சில ஒழுக்க நெறிகளைப் பின்பற்றி வாழும்போது அந்தச் சமூகமானது கட்டுக்கோப்பான சமுதாயம் என்று அழைக்கப்படுகிறது. நெறியிலா நிலையில் நின்று வாழ்வைப் பாழ்படுத்தும் மாந்தருக்கும் பண்பாட்டைச் சொல்லித் தருவது இவ்வாய்வின் முதன்மைக் கடமையாகும்.

கம்பன் படைப்பின் உலகப் பொதுமை

எழுத்துக்கு இடமாகவும், சொல்லுக்கு ஆக்கமாகவும், மொழிக்கு வளமாகவும், பொருளுக்குப் புலப்பாடாகவும் அமைந்த கம்பனின் இக்கவிதை மாளிகை இப்பெருலகின் ஒரு சிறுபடைப்பாக அமைகின்றது. ஒரு சிறுதுளி நீரில் பேரண்டங்கள் பிரதிபலிப்பதுபோல

Volume 4, Issue 1 June 2026 **E-ISSN: 2584-167X**

இப்படைப்பில் உலகம் முழுமையாகப் புலப்படுகின்றது. கம்பன் படைப்பு, ஒரு மொழியினருக்கோ இனத்தினருக்கோ நாட்டினருக்கோ தனியுரிமை உடையதன்று, அது உலகம் முழுமைக்கும் பொதுவானது. இடத்தால் பரந்து நிற்கின்ற இக்காப்பியம், காலத்தையும் வென்றமைந்து, எக்காலத்திற்கும் உரிய நடப்பியல் காப்பியமாகப் புலப்படுகின்றது.

எப்பருவத்தினருக்கும் விருந்தாகும் காப்பியம்

கம்பரின் காப்பியம் காலத்தைக் கடந்து நிற்பதற்குக் காரணம், அதன் கவிநயம் மட்டுமன்றி அது உலகியலோடு ஒட்டி உறவாடி உருவானதே ஆகும்; இது பல்வித மனநிலையும், அறிவுநிலையும், உணர்வுநிலையும் உடைய எல்லாத் தரப்பு மக்களுக்கும் ஒருங்கே விருந்தளிக்கின்றது. இக்காப்பியம் சிறுவர்களுக்கு அதிசயமும் அற்புதமும் நிறைந்த வீரக்கதையாகவும், இளைஞர்களுக்கு அறிவின் பரப்பையும் ஆற்றலின் எல்லையையும் புகட்டும் வழிகாட்டியாகவும், முதியோருக்குப் படிக்கும்தோறும் புத்துணர்வு அளிக்கும் தத்துவமாகவும் திகழ்கிறது. மேலும், இது பக்தர்களுக்கு இறைவனின் திருஅவதாரமான இராமனின் இயல்பைக் கூறிப் பேரின்பச் சுவை நல்குவதோடு மட்டுமன்றி, ஆடவர்களுக்குத் தேவையான அறிவுரைகளைக் கூறி, பெண்களின் வாழ்விற்கும் நல்வழிகாட்டுகின்றது.

வையத்து வாழ்வாங்கு வாழ்தல்

'வையத்து வாழ்வாங்கு வாழ்தல்' என்பது வான்புகழ் வள்ளுவர் பயன்படுத்தும் சொற்றொடர். பூமியில் தோன்றிய ஒவ்வொரு மனிதனும் சில நெறிமுறைகளைக் கடைப்பிடித்து வாழக் கடமைப்பட்டவன். கண்டதே காட்சி கொண்டதே கோலம் என வாழ்வது விலங்கு வாழ்வு. உலகில் நமக்கு மேல் வரிச்சட்டமாக வாழ்ந்த சான்றோர் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதனைப் பார்த்து அதன்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதும், அற நூல்களின் மூலமாக நம் வாழ்வில் கொள்ளத் தக்கவை எவை, தள்ளத் தக்கவை எவை என்று அறிந்து தீயனவற்றை விடுத்து நல்லன நாடி நிற்பதும், சான்றாண்மை உடைய வாழ்வு வாழ நமக்குத் துணைபுரியும்.

இராமன் - சீதையின் தூய அன்பு

தனக்குத் துன்பம் இழைத்தவர்களையும், தம் தூய அன்பினால் அரவணைத்தவர்கள் இராமனும் சீதையும். தீயவர்களை மன்னிக்கும் மாண்பினில் இராமனும் சீதையும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக் கொண்டு முந்தி நிற்கின்றனர். பதினான்கு ஆண்டு கால காடுறை வாழ்க்கையை நிறைவேற்றிக் கொண்டு, இலங்கையில் நடந்த அக்னிச் சோதனைக்குப் பின், சீதையையும் இலக்குவனையும் அயோத்திக்கு அழைத்து வரத் தயாரானான் இராமன்.

தசரதனின் நெகிழ்ச்சி

சிவபெருமான் அருளிய ஆணையைப் பெற்று, விண்ணுலகில் வாழ்ந்து கொண்டிருந்த தசரதன், இராமனைக் காண்பதற்காக மண்ணுலகம் வந்தான். தந்தையைக் கண்ட இராமன் தசரதனின் இணையடி மலரில் வீழ்ந்து வணங்கினான். இராமனைத் தன் மார்புறத் தழுவிய தசரதன் பேசலுற்றான். அன்று கைகேயி பெற்ற வரமாகிய கொடிய வேல் தன் உயிரை வாங்கிய பின்னரும், தன் நெஞ்சத்தில் நின்று கொண்டிருந்ததாகவும், இன்று இராமனின் மார்பை இறுகத் தழுவிக் கொண்டதால் அவ்வேல் அகன்றதாகவும் கூறினான். இதனைக் கம்பர் பின்வருமாறு பாடுகிறார்:

அன்று கேகயன் மகள் கொண்ட வரம் எனும் அயில் வேல்
இன்றுகாறும் என் இதயத்தினிடை நின்றது. என்னைக்
கொன்று நிங்கலது, இப்பொழுது அகன்றது, உன் குலப் பூண்
மன்றல் ஆகம் ஆம் காந்த மாமணி இன்று வாங்க (கம்ப.யுத்த.பா. 10068)

ஒருவன் எவ்வளவுதான் பேராற்றல் மிக்கவனாக இருந்தாலும், அறம் தவறிப் பிறன்மனை நாடினால் (சீதையைக் கவர்ந்தால்) அவனது அழிவு நிச்சயம் என்பதாகும். அன்று கைகேயி

வாங்கிய வரம் என்ற கூர்மையான வேல், இராவணனின் அழிவுக்குக் காரணமாக அவனது நெஞ்சிலேயே மறைந்திருந்தது; அதை இத்தனை காலம் தடுத்து நிறுத்தியது மண்டோதரியின் தூய்மையான கற்புத்திறன் மட்டுமே. இறுதியில், இராமனின் அம்பு என்ற காந்தக்கல், இராவணனின் மார்பைத் துளைத்து அவனது உயிரையும் கர்வத்தையும் ஈர்த்துச் சென்றுவிட்டதன் மூலம் தீய வினைக்கான தண்டனையும், மரணத்தின் முன் வீரம் பலிக்காது என்ற வாழ்வியல் உண்மையும் இதில் வெளிப்படுகிறது.

இராமன் கேட்ட உன்னத வரங்கள்

தசரதச் சக்கரவர்த்தி இராமபிரானை நோக்கி, "மகனே! உனக்கு நான் வழங்கத்தக்க வரத்தைக் கேட்பாயாக" என்று கூறியபோது, இராமன் தன் தனிப்பட்ட சுயநலனை நாடாது, பிறரின் பழி துடைக்கும் இரு உன்னத வரங்களை வேண்டி நின்றான். 'தீயவள்' என்று தசரதனால் தள்ளிவைக்கப்பட்ட தன் தெய்வமாகிய கைகேயித் தாயின் மீதான சினத்தை மாற்றி, அவளை மீண்டும் தனக்குத் தாயாகத் தர வேண்டும் என்பது அவனது முதல் வரமாகும். மேலும், எந்தவொரு பழியும் அறியாத பரதனைத் தசரதன் 'என் மகன் அல்லன்' என்று பிரகடனப்படுத்தியதை மாற்றி, அவனைத் தனது மகனாக மீண்டும் ஏற்றுக்கொண்டு, அவன் என்றும் தனக்குத் தம்பியாகவே இருக்கும்படியான வரத்தை அருள வேண்டும் என்று இராமன் வேண்டினான்.

ஆயினும், உனக்கு அமைந்தது ஒன்று உரை என அழகன்
தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக! எனத் தாழ்ந்தான்!
வாய் திறன்தெழுந்து ஆர்த்தன, உயிர் எலாம் வழுத்த (கம்ப. யுத்த. பா. 10079)

அழகனான இராமன், தன் தந்தை தசரதனிடம், 'அன்று நீ தீயவள் என்று கூறித் துறந்த என் தெய்வமாகிய கைகேயி மீண்டும் எனக்குத் தாயாகவும், அவளது மகன் பரதன் மீண்டும் எனக்குத் தம்பியாகவும் ஆகும் வரத்தைத் தர வேண்டும்' என்று வேண்டி அவனது பாதங்களில் வீழ்ந்து வணங்கினான்; இதைக் கேட்டு அங்கிருந்த அனைத்து உயிர்களும் மகிழ்ச்சியால் ஆரவாரம் செய்து இராமனை வாழ்த்தின" என்பதாகும். தன் வாழ்நாளின் அனைத்துத் துயரங்களுக்கும் காரணமான கைகேயியைப் பழிக்காமல், அவளை மீண்டும் தாயாக ஏற்றுக்கொள்ளும் இராமனின் மன்னிக்கும் மாண்பு, பழிவாங்காப் பெருங்குணம் மற்றும் குடும்ப ஒற்றுமையைப் போற்றும் உன்னதப் பண்பே இப்பாடல் மூலம் நாம் உணரும் ஆகச்சிறந்த வாழ்வியல் பாடமாகும்.

குற்றத்தைத் தன்மேல் ஏற்றுக் கொள்ளும் தெய்வீகப் பண்பு

அதனைத் தொடர்ந்தும் தசரதன் கைகேயி மேல் சினம் தணியாதவனாக இருக்க, இராமன் அவளிடம் எக்குற்றமும் இல்லை என்று கூறி, தார்மீகப் பொறுப்பைத் தன்மேல் ஏற்றுக் கொள்கிறான்.

ஊன் பிழைக்கிலா உயிர்நெடிது அளிக்கும் நீள் அரசை
வான் பிழைக்கு இது முதல் எனாது ஆள்வுற மதித்து
யான் பிழைத்தது அல்லாமல் என்னை ஈன்ற எம்பிராட்டி
தான் பிழைத்தது உண்டோ? என்றான், அவன் சலம் தவிர்ந்தான் (கம்ப. யுத்த. பா. 10081)

தர்மம் தவறாமல், தன் குடிமக்களின் உடலையும் உயிரையும் நெடுங்காலம் காத்து வந்த அயோத்தியின் மாபெரும் அரசாட்சியை, 'எனது தாயின் வஞ்சகத்தால் கிடைத்த இந்த ஆட்சி வான் உலகை விடவும் பெரியது' என்று எண்ணி ஒரு நொடி கூட நான் ஆள நினைத்ததே இல்லை; அப்படி நினைத்திருந்தால் அது என் தவறு (என் பிழை). ஆனால், என்னை ஈன்ற என் தாயாகிய கைகேயி செய்த தவறுக்காக, நான் எப்படிப் பொறுப்பாவேன்? இதில் அவளது பேராசைதான் காரணமே தவிர, என் மீது எந்தத் தவற்றையும் சுமத்த முடியுமா?" என்று பரதன் தன் உள்ளக் குமுறலைக் கொட்டுகிறான். இதைக் கேட்ட மாத்திரத்தில், பரதன் மீது ஐயம்

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

கொண்டிருந்தவரின் கோபமும் சந்தேகமும் (சலம்) முற்றிலும் நீங்கியது என்பதாகும். இதன் மூலம், அரியணை மீது சிறிதும் ஆசைப்படாத பரதனின் மாசற்ற தியாகப் பண்பையும், அண்ணன் இராமன் மீது அவன் கொண்டிருந்த அசைக்க முடியாத பற்றையும், பிறர் கொண்ட சந்தேகத்தைத் தன் நியாயமான பேச்சால் மாற்றிய அவனது நேர்மையையும் நாம் ஆழமாக உணர்ந்து கொள்ள முடிகிறது.

பரதனின் சபதம்

பரதனுடைய பெருந்தன்மையைப் பூரணமாக உணர்ந்துகொண்ட கோசலை, கானகத்திற்குச் சென்று பதினான்கு ஆண்டுகளான பிறகும் இராமன் அயோத்திக்குத் திரும்பி வரவில்லை என்றெண்ணிய பரதன், தான் முன்னர் எடுத்துக்கொண்ட சபதத்தின்படி தீயில் குதித்துத் தன் உயிரை முடித்துக் கொள்ளத் தீர்மானிக்கிறான் என்பதை அறிந்தாள். செய்தி அறிந்த கோசலை விரைந்து வருகிறாள்.

அப்பொழுதின், இவ் உரைசென்று, அயோத்தியினின்
இசைத்தலுமே, அரியை ஈன்ற
ஒப்பு எழுத ஒண்ணாத கற்புடையாள்.
வயிறு புடைத்து, அலமந்து ஏங்கி,
இப்பொழுதே உலகு இறக்கும். யாக்கையினை
முடித்து ஒழிந்தால், மகனே!என்னா.
வெப்பு எழுதினால் அன்னமெலிவுடையாள்
கடிது ஓடி,விலக்கவந்தாள் (கம்ப. யுத்த.பா. 10175)

தன் மகன் கும்பகருணனின் உடல் அழியப் போகிறது; அவனது மரணத்தோடு இந்த உலகமே எனக்கு முடிந்துவிடப் போகிறது" என்று கதறியபடி, காய்ச்சலால் வாடிய அன்னப் பறவையைப் போன்ற மெலிதான உடலமைப்பைக் கொண்ட அந்தத் தாய், தன் மகனைக் காப்பதற்காகக் கடும் வேகம் கொண்டு ஓடிவந்து போரைத் தடுக்க முயல்கிறாள் என்பதாகும். அரக்கர் குலமே ஆனாலும் ஒரு தாயின் பாசமும், தன் பிள்ளை அழியப் போகிறான் என்பதைத் தாங்கிக் கொள்ள முடியாத அவளது தவிப்பும் உலகத்துத் தாய்மார்கள் அனைவருக்கும் பொதுவானதே என்ற மாசற்ற தாய்மையின் பேராற்றலையும், பாசப் போராட்டத்தையும் இப்பாடல் நமக்கு மிக நெகிழ்ச்சியாக உணர்த்துகிறது.

கோசலையின் நெஞ்ச உருக்கம்

பரதன் தீயில் குளித்து இறப்பானேயானால் உலகமே இறக்குமென்று அவள் எண்ணுகிறாள். அழுது அரற்றிப் பரதனை வந்தடைந்து அவனைக் பற்றிக் கொண்டு,

மன் இழைத்ததும், மைந்தன் இழைத்ததும்,
முன் இழைத்த விதியின் முயற்சியால்;
பின் இழைத்ததும், எண்ணில், அப் பெற்றியால்;
என் இழைத்தனை, என் மகனே? (கம்ப. யுத்த. பா. 10178)

மைந்தனே! தசரத மன்னன் வரம் தந்தது ஆகட்டும், கைகேயியின் மகனான பரதன் (அல்லது மந்தரை) அதைச் செயல்படுத்தியது ஆகட்டும், இவை அனைத்துமே அவர்கள் சுயநினைவோடு செய்தது அல்ல; எல்லாம் அவர்கள் பிறப்பதற்கு முன்பே தீர்மானிக்கப்பட்ட 'முன்வினையின் (விதியின்) வலிமையான முயற்சி' ஆகும். இனி எதிர்காலத்தில் நடக்கப் போவதும் ஆராய்ந்து பார்த்தால் அந்த விதியின் வழியேதான் நடக்கும். அப்படியிருக்க, இதில் உன்னுடைய குற்றம் என்று சொல்வதற்கு என்ன இருக்கிறது என் மகனே?" என்று ஆறுதல் கூறப்படுகிறது. இதன் மூலம், மனிதர்கள் செய்யும் நன்மைகளுக்கும் தீமைகளுக்கும் பின்னால் 'விதி' என்ற கண்ணுக்குத் தெரியாத பேராற்றல் இயங்கிக் கொண்டிருக்கிறது என்ற தத்துவத்தையும், சூழ்நிலைகளால் ஏற்படும் பழிச்சொற்களைத் தாங்கித் தவிக்கும் ஒருவருக்கு "இதில் உன்

Academic Research News

Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

பிழையேதுமில்லை" என்று தேற்றுகின்ற ஆறுதலின் உன்னதத்தையும் நாம் உணர்ந்து கொள்ள முடிகிறது.

அண்ணன் வழியே வாழ்வு – இலட்சுமணன்

கம்பராமாயணத்தில் இலட்சுமணன் மற்றும் ஊர்மிளை ஆகிய இருவரின் தியாகமும் மிக உன்னதமானவை, காவியத்தின் மிக உருகாரமான பகுதிகள் ஆகும். ராமனின் வனவாசத்தைத் தொடர்ந்து இவ்விருவரும் செய்த தியாகம், சுயநலமற்ற அன்பின் உச்சத்தைக் காட்டுகிறது. ராமன் காட்டுக்குச் செல்கிறான் என்றவுடன், அயோத்தியின் அரச சுகங்களை ஒரு நொடியில் துறந்து அவனுடன் கிளம்பியவன் இலட்சுமணன்.

- **துறவற வாழ்க்கை:** தனது இளம் மனைவி ஊர்மிளையைப் பிரிந்து, 14 ஆண்டுகள் காட்டில் ராமனுக்கும் சீதைக்கும் தொண்டு செய்வதையே தனது ஒரே லட்சியமாகக் கொண்டவன்.
- **உறக்கத்தைத் துறத்தல் (நித்திரை தியாகம்):** ராம-சீதையரைக் காப்பதற்காக காட்டில் 14 ஆண்டுகளும் இலட்சுமணன் உறங்கவே இல்லை என்று கூறப்படுகிறது. உறக்கத்தை வென்று, வில்லேந்தி இரவும் பகலும் காவல் காத்து நின்றவன்.
- **அண்ணன் மீதான பக்தி:** தனக்கென வாழாமல், அண்ணனின் நிழலாகவே வாழ்ந்து முடித்ததே இலட்சுமணனின் ஆகச்சிறந்த தியாகமாகும்.

கணவன் துயர் தவிர்த்த ஊர்மிளை

கம்பராமாயணத்தில் மிகக் குறைவாகப் பேசப்பட்டாலும், தியாகத்தில் சீதைக்கு நிகரானவள் ஊர்மிளை. சீதை கணவனுடன் காட்டுக்குச் சென்றாள்; ஆனால் ஊர்மிளை கணவனின் கடமைக்காக அயோத்தியிலேயே தங்கிவிட்டாள்.

- **பிரிவுத் துயரம்:** திருமணமான சில நாட்களிலேயே, கணவனை 14 ஆண்டுகள் பிரிந்திருக்கும் கொடுமையான துயரத்தை அமைதியாக ஏற்றுக் கொண்டவள்.
- **கடமைக்குக் குறுக்கே நிற்காமை:** இலட்சுமணன் காட்டுக்குக் கிளம்பும்போது, அவள் அழுது அவனது கடமையைத் தடுத்து நிறுத்தவில்லை. அண்ணனுக்குச் செய்யும் தொண்டே முக்கியம் என உணர்ந்து, கணவனை இன்முகத்தோடு வழியனுப்பி வைத்தாள்.
- **அயோத்தியில் தனிமை:** மாமனார் (தசரதர்) இறந்து, அண்ணனும் அண்ணியும் காடேக, கணவனும் பிரிந்த நிலையில், அரண்மனையின் சோகக் கடலில் 14 ஆண்டுகள் கண்ணீரோடு, மௌன விரதமிருப்பது போல் வாழ்ந்தவள் ஊர்மிளை.

தர்மத்தின் வடிவாகப் பரதன்

நீ இப்படித் தீப்பாய எண்ணுவாயாயின் நாடு, சேனை, தாயர் தீயில் விழுவதோடு தனி அறமும் தீயில் விழும் என்று கோசலை கூறுகிறாள். தர்மம் எப்போதும் தன் பயனைப் பற்றிச் சிந்திக்காது என்பதை,

தரும நீதியின்தன் பயன் ஆவது உன்
கருமமே அன்றிக் கண்டிலம், கண்களால்;
அருமை ஒன்றும் உணர்ந்திலை; ஐய! நின்
பெருமை, ஊழி திரியினும், பேருமோ? (கம்ப. யுத்த.பா. 10180)

அண்ணா! தர்மம், நீதி என்று உலகத்தார் பேசும் நல்லறங்களின் உண்மையான பலன் என்ன என்பதை, உன்னுடைய தியாகம் நிறைந்த செயலின் மூலமாகவே நாங்கள் இன்று எங்கள் கண்கூடாகக் கண்டோம். உன்னுடைய இந்த மாபெரும் பெருமையையும் புகழையும் நீயே கூட முழுமையாக உணரவில்லை. காலங்களை எல்லாம் கடந்து பிரளயமே (ஊழி) வந்து இந்த உலகமே தலைகீழாக மாறினாலும், உன்னுடைய புகழும் பெருமையும் ஒருபோதும் அழியாது, மாறாது" என்று வீடணன் தன் அண்ணனின் வீரத்தையும் தர்மத்தையும் போற்றுகிறான். தன் அண்ணன் இராவணன் செய்த தவற்றிற்காகப் போரிட்டு மடிந்தாலும், 'செஞ்சோற்றுக்

Academic Research News
Peer-Reviewed Journal

Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

கடனுக்காக' உயிரைத் தந்த கும்பகருணனின் உயர்ந்த பண்பையும், அண்ணன்-தம்பிக்கு இடையே உள்ள ஆழமான பாசத்தையும், காலத்தைக் கடந்து நிற்கும் புகழின் உன்னதத்தையும் இப்பாடல் நமக்கு மிக நெகிழ்ச்சியாக உணர்த்துகிறது.

கும்பகர்ணன், இந்திரஜித்தின் தியாக உள்ளம்

கம்பராமாயணத்தில் அரக்கர் குலத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், தங்கள் ஒப்பற்ற தியாக உள்ளத்தால் கும்பகர்ணனும் இந்திரஜித்தும் காவியத்தில் உன்னத இடத்தைப் பெறுகின்றனர். இராவணன் செய்தது தவறு என்றும், ராமனே பரம்பொருள் என்றும் இருவருக்குமே நன்றாகத் தெரிந்திருந்தாலும், அவர்கள் தங்களின் தனிப்பட்ட தர்மத்திற்காகவும் பாசத்திற்காகவும் உயிரைத் தியாகம் செய்யத் துணிந்தனர். கும்பகர்ணன், ராமன் பக்கம் சென்றால் அரியணையும் அழியா உயிரும் கிடைக்கும் என்று தம்பி வீடணன் ஆசை காட்டியபோதும், "இத்தனை காலம் இராவணன் தந்த உணவை உண்டுவிட்டு, அவனுக்கு ஆபத்து வரும்போது பகைவனிடம் அடைக்கலம் புகுவது தர்மம் அன்று" என மறுத்து, செஞ்சோற்றுக் கடனைக் கழிக்கவும் அண்ணன் அழியும்போது தான் மட்டும் வாழ விரும்பாமலும் தன் உயிரைத் தியாகம் செய்தான்; மேலும் தன் மரணத் தருவாயிலும் தம்பி வீடணனைக் காக்குமாறு ராமனிடம் வேண்டி தம்பிக்காகவும் தியாகியாக நின்றான். அவனது மகனான இந்திரஜித்தோ, நிகும்பலா யாகம் அழிந்த போதே தன் தோல்வியையும் மரணத்தையும் உணர்ந்து, சீதையை விட்டுவிடுமாறு தந்தையிடம் மன்றாடினான்; ஆனால் இராவணன் அவனது வீரத்தை ஐயப்பட்டுப் பேசியதால், தந்தையின் மானத்தையும் கௌரவத்தையும் காப்பதே ஒரு மகனின் கடமை என்று கருதி, வெற்றி பெற முடியாது என்று தெரிந்தே போர்க்களம் புகுந்து தன் இன்னுயிரைத் தியாகம் செய்தான். இவ்வாறு, உண்ட வீட்டிற்குத் துரோகம் செய்யக் கூடாது என்ற நன்றியுணர்வுக்காக கும்பகர்ணனும், தந்தையின் மானத்தைக் காப்பதற்காக இந்திரஜித்தும் தங்களின் உயிரைத் தியாகம் செய்து, தீமையின் பக்கம் நின்ற போதிலும் தங்களின் தியாகப் பண்பால் போற்றுதலுக்குரிய மாண்பினர்களாக மிளிர்கின்றனர்.

எண்ணில் கோடி இராமர்கள்

இராமனைப் பெற்றெடுத்த கோசலை, பரதனுடைய நேர்மையைப் பாராட்டித் தான் ஆரம்பத்தில் அவனைப் பற்றி நியாயமற்ற முறையில் சந்தேகித்தற்குப் பூரணமாகப் பிராயச்சித்தம் செய்து கொள்ளும் வகையில் பாடுகிறாள்:

எண் இல் கோடி இராமர்கள் என்னினும்,
அண்ணல் நின் அருளுக்கு அருகு ஆவரோ?
புண்ணியம் எனும் நின் உயிர் போயினால்,
மண்ணும் வானும் உயிர்களும் வாழுமோ? (கம்ப. யுத்த.பா. 10181)

முன்னர்க் குகன் பரதனைப் பார்த்து 'ஆயிரம் இராமர் நின்கேழ் ஆவரோ?' என்றான். ஆனால், இராமனைப் பெற்ற தாயோ 'எண்ணில் கோடி இராமர்களும் பரதன் அருளுக்கு அருகாக மாட்டார்கள்' என்று கூறுகிறாள். தந்தை கட்டளையை மேற்கொண்டு நடந்த இராமன் கடமையைச் செய்தான்; ஆனால், ஒருவரும் ஏவாதிருக்கவும் தன் சொல்லைக் காக்கத் துணிந்த பரதன் 'அருள்' உடையவனாகிறான்.

சத்ருக்கனனின் பாத்திரப் படைப்பு

கம்பராமாயணத்தில் மிகக் குறைந்த பாடல்களில் மட்டுமே இடம்பெற்றாலும், தன் உன்னதமான குணத்தால் வாசகர்களின் மனதில் ஆழமான தடம் பதிக்கும் அற்புதமான பாத்திரம் சத்ருக்கனன் ஆவார். அண்ணன் இராமன் பதினான்கு ஆண்டுகாலம் கழிந்தும் அயோத்திக்குத் திரும்பாததால், பரதன் தீப்பாய்ந்து தன் உயிரை மாய்த்துக்கொள்ளத் துணிந்தான். அப்போது, நாட்டை சத்ருக்கனனிடம் ஒப்படைத்து, 'நீயே இனி இந்த நாட்டை ஆள்வாயாக' என்று பரதன் கூறினான். அதனைக் கேட்ட சத்ருக்கனன், அரியணை ஏறும்

பேராசை என்னும் நஞ்சினை உண்டவனைப் போல உடலும் மனமும் நடுங்கி, அண்ணன் காட்டிய அரச பதவியை மிகக் கடுமையாக மறுத்துரைத்தான்.

மூத்த மகனாகிய இராமபிரான் தந்தை மற்றும் தாயின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு, மகுடத்தைத் துறந்து காடேகினான்; அப்படிச் சென்ற அண்ணனுக்கு உடனிருந்து எந்நேரமும் சேவை செய்வதையே தன் வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு இலக்குவனும் அவனோடு காடேகினான்; இப்போது அண்ணன் குறித்த காலத்தில் திரும்பாததால், பரதனாகிய நீயும் அண்ணன் மீதான பாசத்தால் தீப்பாய்ந்து உன் உயிரையே தியாகம் செய்யத் துணிந்துவிட்டாய்; இப்படித் தியாகத்தையே மூச்சாகக் கொண்ட உன்னதச் சகோதரர்களுடன் ஒரே குலத்தில் பிறந்துவிட்டு, நான் மட்டும் எவ்வித வெட்கமும் இல்லாமல், சுயநலத்துடன் இந்த அரியணையில் ஏறி அரசாள்வேனோ? அது ஒருபோதும் இயலாது" என்று சத்ருக்கனன் மறுத்தான். தன் அண்ணன்மார்களின் தியாகப் பண்போடு தன்னை ஒப்பிட்டுப் பார்த்து, தனக்குக் கிடைத்த பேரரசைத் துச்சமாக மதித்த சத்ருக்கனனின் இந்த உன்னதப் பேச்சு, காப்பியத்தில் அவனது சகோதரப் பாசத்தையும், அரியணை மீதான பற்றற்ற தன்மையையும் நமக்கு மிக ஆழமாக விளக்குகிறது.

பதவி தியாகத்தின் மாண்பு

பதவி வேண்டும் வேண்டும் என்று மனிதர்கள் போட்டியிடும் இக்காலத்தில், கிடைத்த பதவியை 'வேண்டாம் வேண்டாம்' என உதறித் தள்ளிய இராம சகோதரர்களின் மாண்பு மலையளவு உயர்ந்து நிற்கிறது என்பதை,

கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்துப், பின்பு
போனானும் ஒரு தம்பி; போனவன்
தான் வரும் அவதி போயிற்று, என்னா,
ஆனாத உயிர்விட என்று அமைவானும்
ஒரு தம்பி; அயலே நாணாது,
யானாம் இவ் அரசு ஆள்வென்? என்னே,
இவ் அரசாட்சி இனிதே அம்மா! (கம்ப. யுத்த. பா. 10172)

காட்டை ஆள்வதற்காக நாட்டு ஆட்சியைத் துறந்து இராமன் சென்றபோது, அவனைக் காப்பதற்காகவே அவனோடு கூடவே சென்றானே இலக்குவன், அவன் ஒரு தம்பி! இராமன் காடேகிய போது, அவன் திரும்பி வருவதாகச் சொன்ன பதினான்கு ஆண்டுகாலக் கெடு முடிந்துவிட்டதே என்று அஞ்சி, அண்ணன் வராவிட்டால் தீப்பாய்ந்து உயிர்விடத் துணிந்தானே பரதன், அவன் ஒரு தம்பி! ஆனால், இவர்களுக்கெல்லாம் நேர்மாறாக, அண்ணன் இராவணன் அழியப் போகிறான் என்பதை அறிந்து, அவனது எதிரியான இராமனிடம் சரணடைந்து, வெட்கமே இல்லாமல் 'நான் இந்த இலங்கையை ஆள்வேன்' என்று வந்து நிற்கிறாயே வீடணா, நீயும் ஒரு தம்பி! ஆஹா, இந்த அரசாட்சி அத்தனை இனிமையானதா?" என்று கும்பகருணன் வீடணனைக் கேலி செய்கிறான். இதன் மூலம், பரதன் மற்றும் இலக்குவனின் அண்ணன் மீதான சுயநலமற்ற, உன்னதமான பாசத்தோடு ஒப்பிட்டு, வீடணன் இராமனைச் சரணடைந்ததை கும்பகருணன் தன் சொந்தக் கோணத்தில் விமர்சிப்பதையும், எத்தகைய சூழலிலும் உடன் பிறந்த அண்ணனை விட்டுக்கொடுக்கக் கூடாது என்ற அரக்கர் குல தம்பியரின் பாசப் பிணைப்பையும் இப்பாடல் மிக அழுத்தமாக உணர்த்துகிறது.

முடிவுரை

கம்பன் மனித மனங்களின் ஆழங்களை உணர்ந்து செதுக்கிய காவியச் சித்திரங்கள் யாவும் கம்பராமாயணத்தில் முழுமை பெற்று விளங்குகின்றன. உலகப் பொதுமை நோக்குடன் படைக்கப்பட்ட இக்காப்பியத்தில், 'பதவி' என்ற பேராசைக்காக மனிதகுலம் அடித்துக்கொள்ளும் தற்காலச் சூழலுக்கு, கிடைத்த அரியணையை 'வேண்டாம்' என உதறித்

Academic Research News
Peer-Reviewed Journal
47
Volume 4, Issue 1 June 2026 E-ISSN: 2584-167X

தள்ளிய இராம சகோதரர்களின் தியாக மாண்பு மலையளவு உயர்ந்து வழிகாட்டுகிறது. தனக்குத் தீமை செய்தவர்களையும் மன்னிக்கும் இராமனின் மாண்பும், கணவனின் கடமைக்காகத் தனிமைத் துயரைத் தாங்கிய ஊர்மிளையின் மௌனத் தியாகமும், தீமையின் பக்கம் நின்றபோதும் செஞ்சோற்றுக் கடனுக்காக உயிர்நீத்த கும்பகருணன், இந்திரஜித்தின் நன்றியுணர்வும் மனிதப் பண்பாட்டின் உன்னத எல்லைகளாகும். தன் சிற்றன்னையான கைகேயியைப் பழியிலிருந்தும், தம்பி பரதனைத் தார்மீகக் குமுறலிலிருந்தும் விடுவித்து இராமன் காட்டும் இப்பெருநெறி, இன்றைய சமுதாயத்தின் கட்டுக்கோப்பிற்கு மிகவும் அவசியமானதாகும். பல்வேறு காரணங்களுக்காகத் தங்களுக்குள் ஒற்றுமையின்றிப் பகை, வெறுப்பு, பழிதீர்க்கும் உணர்வோடு பிரிந்து நிற்கும் இன்றைய மனிதகுலம் ஒன்றுபட வேண்டும்; 'வையத்து வாழ்வாங்கு வாழ வேண்டும்' என்பதே கம்பரின் பெருவிருப்பம் என்பதை இக்கட்டுரை தெளிவுபடுத்துகிறது. எக்காலத்து மனிதர்களுக்கும் அறவழியைப் போதிக்கும் உன்னத வாழ்வியல் வழிகாட்டியாகக் கம்பராமாயணம் விளங்குவதே இக்கட்டுரையின் நீங்கா நிலைபேற்றிற்கு அடிப்படையாகும் என்பதில் ஐயம் இல்லை.

குறிப்புகள்

[1] கம்பர், கம்பராமாயணம் (யுத்த காண்டம்), (பல்வேறு பதிப்புகள்).
[2] இளம்பிறை மணிமாறன், கம்பன் கவித்திறன்/காப்பிய ஆய்வுரைகள்.
[3] கோல்ரிட்ஜ், சாமுவேல் டெய்லர், பயோகிராஃபியா லிட்டரேரியா, 1817. (குறிப்பு: "ஆழ்ந்த தத்துவஞானியாக இல்லாமல் எந்த மனிதனும் ஒருபோதும் சிறந்த கவிஞனாக இருந்ததில்லை")
[4] எமர்சன், ரால்ஃப் வால்டோ, பார்னாசஸிற்கான முன்னுரை, 1874. (குறிப்பு: "சிறந்த கவிஞர்கள் அவர்கள் தூண்டும் மனநிலையைக் கொண்டு மதிப்பிடப்படுகிறார்கள்")
[5] கம்பன், கம்பராமாயணம் (முழுமையாக ஆறு காண்டங்கள்) - மூலமும் உரையும், வை. மு. கோபாலகிருஷ்ணமாசாரியர் உரை, உமா பதிப்பகம், சென்னை.
[6] கம்பராமாயணம் - யுத்த காண்டம் (மகாவித்துவான் உரை), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை.
[7] திருவள்ளுவர், திருக்குறள் - மூலமும் பரிமேலழகர் உரையும், கழக வெளியீடு, சென்னை.
[8] ஜெகந்நாதன், கி. வா., கம்பன் கலை, அமுதநிலையம், சென்னை.
[9] இராதாகிருஷ்ணன், சா., கம்பனில் பாத்திரப் படைப்புக்கள், பாரி நிலையம், சென்னை.
[10] பேட்டர், வால்டர், பாராட்டுகள்: நடை குறித்த கட்டுரையுடன் (அல்லது தொடர்புடைய அழகியல் கட்டுரைகள்). (குறிப்பு: "நல்ல கலையை உருவாக்குவதற்கு நான் விளக்க முயற்சித்த நிபந்தனைகளின் அடிப்படையில்...")
[11] ரிச்சர்ட்ஸ், I. A. (ஐவர் ஆம்ஸ்ட்ராங்), இலக்கிய விமர்சனத்தின் கோட்பாடுகள் / விரிவுரை குறிப்புகள். (குறிப்பு: கவிதையின் பயன்பாடு மற்றும் ஒலிகளின் சேர்க்கை குறித்த திறனாய்வுக் கோட்பாடு)

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை
கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை
கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.
இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.